**தலைப்பு 266 – வவுனியா மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஜூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரிப் புத்தகங்களின் படி, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதியை விட ரூபா 1,041,408 தொகை மிகையாக அந்தச் சொத்துக்களின் அத் திகதியில் உள்ளவாறு பெறுமதி என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குத் திணைக்களத்தினால் வைக்கப்பட்டிருந்த குறைபாடுடைய பதிவொன்றின் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. சரி செய்வதற்காக மாற்றப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமின்மை ஏற்படாதவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண வேலைகள் என காட்டப்பட்டிருந்த பெறுமதியை விட ரூபா 9,422,591 தொகை மிகையாக அந்தச் சொத்துக்களின் பெறுமதி என காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடங்களில் நிர்மாண வேலைகள் மற்றும் கொள்வனவுகளுக்கான கொடுப்பனவுகள் மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்படும். | இணக்கமின்மை ஏற்படாதவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டலின் படி குழுவின் செயலாளரினால் தின வரவுப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு முதல் அங்கத்தவர்களின் வரவுகள், பதிவேடு ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படும். | முறைப்பிரகாரம் குறிப்பிட்ட பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 454(2) பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் தனியாக பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | நிதிப் பிரமாணம் 845(1) பிரகாரம் உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான படிவேடு ஒன்று பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு மூலதனச் செலவு விடயத்தில் வழங்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் 34 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்டவாறு மின் பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்யப்படாமை இதற்கு காரணமாக இருந்தது. | குறிக்கோளை நிறைவேற்றக் கூடியவாறு ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீண்டுவரும் செலவு விடயங்களின் கீழ் செலுத்த வேண்டியிருந்த வவுனியா பொருளாதார நிலைய பாதுகாப்புச் சேவைக் கட்டணமாகிய ரூபா 2,152,601 தொகை மூலதனச் செலவு விடயம் ஒன்றின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பாதுகாப்புச் சேவைக் கட்டணக் கொடுப்பனவிற்காக வரிசை அமைச்சினால் ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தது மூலதன செலவு விடயம் ஒன்றின் கீழ் ஆகும். | அவ் அவ் செலவுகள் சரியான செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 02/2020 மற்றும் 2020 ஒக்தோபர் 09 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டல் கோவை 06 இன் 3.4 பந்தியின் படி நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இன் கீழ் காட்டப்பட்டிருந்த பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களின் பெறுமதி திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக் கூற்றுடன் இணங்க வேண்டியிருந்த போதிலும் அப் பெறுமதிகளுக்கிடையே ரூபா 81,081 இற்கான இணங்காத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் இவ்வாறான வழுக்கல் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க பொறுப்புக்கள் அறிவிக்கப்பட வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு அமைச்சிலிருந்து கிடைத்திருந்த மீண்டுவரும் ஏற்பாடுகளில் இருந்து ரூபா 1,253,750 தொகை எனப்படும் 41 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் 03 அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் இருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளில் சேமிப்புக்கள் 06 சதவீதத்திற்கும் 57 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | பில் பத்திரங்கள் கிடைப்பதில் தாமதம், பிழைகள் காட்டப்பட்டமை, தாமதமாக ஏற்பாடுகள் கிடைத்தல், கொவிட் தொற்றுநோய் நிலைமை ஆகிய காரணங்களினால் இந்த ஏற்பாடுகள் சேமிப்பதற்கு காரணமாக இருந்தது. | கிடைத்த ஏற்பாடுகளை உரிய குறிக்கோள்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ------------------------------------------------- | ------------------ |
| (அ) | மாவட்ட செயலகத்தில் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 135 இன் படி நிதிக் கட்டுப்பாட்டுக்காக கடமை சாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், உங்களால் குறிப்பிடப்பட்டவாறு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையான குறிப்பிட்ட காலப் பகுதிகளில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் அனுப்புதல் நடைபெறுகின்றன என கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப் படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அறிக்கையில் 3.7 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளித்திருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்கல் சிங்கள மொழியில் கிடைப்பதனால் அவற்றை மொழிபெயர்த்து உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி பதில்கள் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டிருந்த தாமத்தினால், பதில் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 395(இ) | மாவட்ட செயலகத்துக்குரிய 2020 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்று 2021 பெப்ரவரி 18 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. | மாதாந்த வங்கிக் கணக்கு விபரங்கள் கிடைப்பதில் தாமதமாதல் இதற்கு காரணமாக இருந்தது. | வங்கி இணக்கக் கூற்று குறிப்பிட்ட காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் |
| (ஆ) | 2020 அக்தோபர் 09 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக வழிகாட்டல் 06 இன் பந்தி 3.4 | மீளாய்வாண்டில் திறைசேரியினால் அறிவிக்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 81,081 இற்கான பொறுப்புக்கள் 2021 ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது. | இது கணக்கீட்டு வழு ஒன்றாகும். எதிர்காலத்தில் வழுக்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் முறைப்பிரகாரம் திறைசேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவி இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் அறிவிடப்பட வேண்டியிருந்த ரூபா 381,912 தொகை, தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் படி அறவீடு செய்வதற்கு கடந்த 04 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தரை மீண்டும் கடமைக்காக இணைக்கப்பட்டதுடன், நிலுவைக் கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலங் கடந்த கடன் மீதிகளை தாமதம் இன்றி அறவீடு செய்ய வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014/01 இலக்க மற்றும் 2014 பெப்ரவரி 17 திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் படி 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக முறையான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய சுற்றறிக்கையின் படி தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ரூபா 291.64 இற்கான மதிப்பீடு ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வவுனியா பொருளாதார நிலையம் 2018 ஆண்டில் மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிலையத்தை பயன்படுத்துவதற்காக இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிலையத்தை திறப்பதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | நிலையம் நிர்மாணிக்கப்பட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வவுனியா வடக்கு பிரதேச செயலகக் கட்டட நிர்மாண வேலையின் போது மேற்கொள்ளப்படாதிருந்த 02 வேலை விடயங்களுக்காக ரூபா 223,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், வேலைத்தளத்தில் காணப்பட்ட மூலப்பொருட்களுக்காக ரூபா 3,338,560 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த இருப்பு தொகை தொடர்பாக முறையான பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்படாத வேலை விடயங்களில் சில வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், மீதி வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | நிறைவேற்றப்படாத விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டியதுடன், மூலப்பொருள் இருப்பு தொடர்பாக முறையான பதிவுகள் பேணப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இணங்கிய ஒப்பந்த உடன்படிக்கையின் படி வேலை ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் வேலைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தொகை ரூபா 6,001,700 தொகைக்கான 03 மூலதன விடயங்களுக்காக அவ்வாறான வேலைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட காலத்துக்குள் வேலைத்திட்டம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விடயம் ஆரம்பிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் வேலைத்திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தொகை ரூபா 22,692,910 தொகை பெறுமதியான 04 மூலதன விடயங்களுக்காக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தாமல் செயற்படுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வுக் கூட்டங்கள் எதிர்காலத்தில் நடாத்தப்படும். | வேலைத் திட்டத்திற்காக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுத்தொகை ரூபா 4,281,700 தொகைக்கான 02 மூலதன விடயங்களுக்காக உடன்படிக்கையின் நிபந்தனை 13.1a மற்றும் 13.1c படி விபத்துக் காப்புறுதி உள்ளடக்கம் பெற்றிருக்கவில்லை. | வேலைகளுக்காக காப்புறுதி செய்யப்பட்டப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட நிபந்தனைகளின் படி காப்புறுதி செய்யப்பட்டது என தொடர்பாக தவறுதலாக கவனம் செலுத்தப்படவில்லை. | மூலதன விடயங்களுக்காக அனைத்து விபத்துக்களையும் உள்ளடங்கிய காப்புறுதி உள்ளடக்கம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்கு சொந்தமான 03 வாகனங்கள் 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | பழுதுபார்த்தல் செயற்திறன் அற்றது என கிடைத்த பரிந்துரையின் படி அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயற்திறனுடன் வாகனங்களை அப்புறப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வவுனியா பொருளாதார நிலையம் 2018 ஆம் ஆண்டு முதல் இது வரை பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக அக் காலப் பகுதியில் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,922,195 இற்கான செலவுகள் அனைத்தும் சிக்கனமற்றதாக ஆகியிருந்தது. | இந்த நிலையத்தை திறக்கும் வரை உரிய முறையில் பராமரிக்கப்படாவிடின் பயன்படுத்த முடியாத நிலைமையை அடையக் கூடியதாக இருப்பதனால் அதனை பராமரித்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்காக பெறுமதி ஒன்று பெற்றுக் கொள்வதற்காக நிலையத்தை பயன்படுத்த வேண்டும். |

### 3.7 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்காமல் இருந்த கால எல்லை 03 மாதங்களுக்கும் 08 மாதங்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. | விசாரணை அலுவல்கள் முடிவடைந்த பின்னர் பதில் அனுப்பப்படும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு குறிப்பிட்ட காலப் பகுதியில் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் DMA/01-2019 மற்றும் 2019 ஜனவரி 05 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த திட்டம் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னர் சமர்ப்பிக்கப்படும். | உரிமை முறையில் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 திகதி அளவில் மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணி வெற்றிடங்கள் 75 காணப்பட்டது. | நியமனம் செய்யும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு காணப்படாமையால் பதவியணி விபரங்கள் ஒரு மாதத்திற்கு இரண்டு தடவைகள் தொடர்புடைய அமைச்சிற்கு அறிவித்து அதன் படி உரிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சேவையின் தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளல். |